**O.S.No. 185/2014**

**Date 21.07.2025**

**வா.சா.1 சுமதி**

1,2 **பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் வி.கேபுதூர் தாலுகா, அண்ணாமலைபுதூரில் குடியிருந்து வருகிறேன். எனது தகப்பனார் பெயர் கருப்பசாமி தேவர் குமாரர் கண்ணப்பதேவர் என்றால் சரிதான். மேற்படி கருப்பசாமி தேவர் குமாரர் கண்ணப்ப தேவரின் உடன்பிறந்தவர்கள் யார் என்றால் அவருக்கு உடன்பிறந்தவர்கள் யாரும் இல்லை. எனது தகப்பனாரின் தகப்பனரான கருப்பசாமி தேவரின் உடன்பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் 4 பேர்கள் உள்ளார்கள். கருப்பசாமிதேவர், பெருமாள் தேவர், உடையார் தேவர், கண்ணப்ப தேவர் ஆகும். மேற்கண்ட 4 நபர்களின் வாரிசுகள் தற்போது வரை உயிருடன் உள்ளார்கள் என்றால் சரிதான். மேற்கண்ட 4 நபர்களின் மக்கள் பேரன்மார்கள் ஆகியோர்கள் உயிருடன் உள்ளார்கள். மேற்கண்ட நபர்களான கருப்பசாமிதேவர், பெருமாள் தேவர், உடையார் தேவர், கண்ணப்ப தேவர் ஆகியோரின் தகப்பனார் பெயர் காசிகண்ணப்பதேவர் என்று சொல்வார்கள், கண்ணப்பதேவர் என்று அழைப்பார்கள். மேற்படி காசி கண்ணப்பதேவர் என்ற கண்ணப்பதேவரின் தகப்பனார் பெயர் மருதப்ப தேவர் என்றால் சரிதான். மேற்படி காசி கண்ணப்பதேவர் என்ற கண்ணப்பதேவருக்கு இரண்டு மனைவிகள் என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. காசி கண்ணப்பதேவர் என்ற கண்ணப்பதேவருக்கு எத்தனை மனைவிகள் என்று நான் விசாரித்தது கிடையாது. தெரிந்துகொண்டதும் இல்லை. மேற்படி மனைவிகளை நான் பார்த்ததும் இல்லை. மேற்படி காசி கண்ணப்பதேவர் என்ற கண்ணப்பதேவரின் வாரிசுகள் எவர் என்றும் எனக்கு தெரியாது. மருத்தப்ப தேவர் குமாரர் காசி கண்ணப்பதேவர் என்ற கண்ணப்பதேவரின் வாரிசுகள் குறித்தும் எனது வழக்குரையில் கூறவில்லை என்றால் சரிதான். 2ம் வாதி கிருஷ்ணன் எனது சகோதரி உமாபார்வதியின் கணவர் ஆவார். 4ம் பிரதிவாதி எனது உடன்பிறந்த சகோதரி என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி எனது சகோதரர் என்றால் சரிதான். நான், 3, 4 பிரதிவாதிகள் கருப்பசாமி குமாரர் கண்ணப்பதேவரின் வாரிசுகள் என்றால் சரிதான். எனது தகப்பனார் கருப்பசாமி குமாரர் கண்ணப்பதேவர் கயத்தாரில் குடியிருந்து அரசு அலுவலகத்தில் உதவியாளராக பணி செய்தார்.

எனது தகப்பனாருக்கு பாப்பா, லட்சுமி என்ற இரண்டு மனைவிகள் ஆவார்கள். மேற்படி பாப்பாவிற்கு நான், முருகன் என்பவர்களும் வாரிசுகள் ஆவோம். 2ம் மனைவியான லட்சுமிக்கு 3, 4 பிரதிவாதிகள் வாரிசுகள் ஆவார்கள். தபசில்சொத்துக்கள் இருக்கும் ஊரில் நானோ, 3, 4 பிரதிவாதிகள் குடியிருக்கவில்லை என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் மருதப்பதேவர் குமாரர் காசிகண்ணப்ப தேவர் என்ற கண்ணப்பதேவருக்கு பாத்தியப்பட்ட சொ்த்துக்கள் என்றால் சரிதான். மேற்படி கண்ணப்பதேவரின் தகப்பனாரையும் காசிமருதப்பதேவர் என்று அழைப்பார்கள் என்றால் சரிதான். காசி என்பவர் அவர்கள் குடும்பத்தில் அவர்களை அடையாளப்படுத்துவதற்காக விடப்பட்ட பட்டப்பெயர் என்றால் சரிதான். தாவா சொத்துக்களை 04.10.1993 ம் ஆண்டு காசிமருதப்ப தேவர் குமாரர் கண்ணப்பதேவரிடம் 3ம் பிரதிவாதி பாலமுருகன் அடமானம் பெற்றிருந்தார் என்றால் சரிதான். மேற்படி அடமானத்தை காசிமருத்தப்ப தேவர் இறந்தபின்பு அடமான தொகையை வசூல்செய்ய வழக்கு தாக்கல்செய்தார்கள் என்றால் சரிதான். மேற்படி காசி மருத்தப்ப தேவர் 04.08.1996ல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். மேற்படி அடமானத்தை செல்லடிக்க 2005ல் தான் வழக்கு தாக்கல் செய்தனர் என்றால் சரிதான். மேற்படி அடமான வழக்கு எண். 68/2005 என இந்நீதிமன்றத்தில் தாக்க்லசெய்தீருந்தார்கள் என்றால் சரிதான். மேற்படி 68/2005 வழக்கு தாக்கல் செய்தவற்கு முன்பு காசி மருதப்பதேவரின் குமாரர் கண்ணப்பதேவரின் வாரிசுகள் மருதத்தாத்தாள், ஆவுடைத்தாய் இறந்துபோனார்கள் என்றால் சரிதான். காசி மருதப்பதேவரின் குமாரர் கண்ணப்பதேவருக்கு 4ம் பிரதிவாதி உமா பார்வதி வாரிசு கிடையாது என்றால் சரிதான். மேற்படி 68/2005 வழக்கை தனது உடன்பிறந்த சகோதரி 4ம் பிரதிவாதியை வாரிசாக காட்டி அடமான தொகையை வசூல் செய்தவற்கு வழக்கு தீர்ப்பு பெற்றிருந்தார் என்றால் சரிதான். தாவா சொத்துக்களை பொறுத்து நானும், 3, 4 பிரதிவாதிகள், கிருஷ்ணன், மருதையாதேவர், செல்லையாத்தேவர் மனைவி மருத்தாத்தாள், பரமாயிஅம்மாள், செல்லச்சாமி, அ.செல்லத்துரை, மாரியப்பன், கருப்பசாமி ஆகிய 11 பேர்கள்பெயரில் 1ம் வாதி புகார் அளித்து குற்றவியல் வழக்கு எண். 231/2012 என்ற பிரிவுகள் 149, 465, 467, 474, 506(1)ன்படி வழக்கு பதிவு செய்து நாங்கள் அதில் ஜாமீன் பெற்றுள்ளோம்.

மேற்படி வழக்கானது பிராது சொத்தை மோசடி ஆவணங்கள் உற்பத்தி செய்து பிராது சொத்தை அபகரிக்க எத்தனிப்பதாக கொடுக்கப்பட்ட புகார் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் 6 ம் எதிரி செல்லையாத்தேவர் மனைவி மருத்தாத்தாள் எனக்கு உறவு முறை கிடையாது. மேற்படி 7 ம் எதிரியை 6 ம் எதிரியான மருத்தாத்தாளின் மகள் ஆவார். 6 ம் எதிரி செல்லையாத்தேவர் மனைவி மருத்தாத்தாள் அவரது மகள் பராமாயிஅம்மாளுக்கு ஒரு ஏற்பாடு ஆவணம் 02.12.2011 ல் பிறப்பித்து கொடுத்துள்ளரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி ஏற்பாடு ஆவணம் மேற்சொன்ன புகாருக்கு பின்பு 30.08.2012 ல் ஏற்பாடு ரத்து ஆவணம் பிறப்பித்துகொடுத்துள்ளார் என்றால் சரிதான். தாவா சொத்துக்களை கிரையம் வாங்குவதற்கு முன்னர் வில்லங்கம் எடுத்து பார்த்தீர்களா என்றால் இல்லை. நான் கிரையம் வாங்குவதற்கு முன்பே 2006 ல் 2 ம் பிரதிவாதி பெயரில் ஒரு உயில் ஆவணம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் அதுகுறித்துதெரியாது. 2 ம் பிரதிவாதி 1 ம் பிரதிவாதிக்கு 21.12.2006 ல் தாவாசொத்துக்களை கிரையம் கொடுத்து கிரைய ஆவணம் பதிவு செய்துள்ளார் என்றால் தெரியாது. நான் கிரையம் வாங்கும் காலத்தில் பட்டா கண்ணப்பதேவரின் மனைவி ஆவுடைத்தாயின் பெயரில் ஏற்பட்டிருந்தது என்றால் அதை நான் பார்க்கவில்லை. கிரையம் பெறுவதற்கு முன்பு உரிமை மூலம் சம்பந்தமாக ஆவணங்களை தாவா சொத்து குறித்து பார்க்கவில்லை. தாவா சொத்துக்களை பாலமுருகன், மருதையா தேவர் ஆகியோர்கள் என்னிடம் சொல்லி எழுதிக்கொடுத்தார்களா என்றால் பாலமுருகனும் உமா பார்வதியும் எனக்கு கிரையம் கொடுத்த மருதையா தேவரை ஏமாற்ற பார்ப்பதாகவும், அதனால் கிரையம் எழுதி தருகிறேன், பெற்றுக்கொள் என மருதையா தேவர் என்னிடம் கூறினார். அதனால் ஒரு ஆவணம் வேண்டும்என்பதற்காக மருதையா தேவர் எனது பெயரில் ஆவணம் ஏற்படுத்தி கொடுத்தார். மருதையா தேவர் தாவா சொத்துக்களை அனுபவம் செய்தவற்கு ஆவணங்கள் அவரதுபெயரில் இல்லை. பெருமாள் தேவர் குமாரர் மருதையா தேவர் எனக்கு சித்தப்பா ஆவார். எனது சித்தப்பாவிற்கு உடன்பிறந்தவர்களின் வாரிசுகள் உள்ளனர் என்றால் சரிதான். மேற்படி மருதையா தேவர் தனக்கு எவ்விதத்தில் சொத்து பாத்தியம் என்று ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளரா என்றால் ஆவணத்தில் குறிப்பிடவில்லை.

அசல் வழகது எண். 68/2005 வழக்கிற்கு எவ்வளவு தொகை செலுத்தப்பட்டிருந்தது என்ற விவரம் குறித்து எனக்கு தெரியும். எனக்கு மருதையா தேவர் கிரையம்கொடுப்பதற்கு முன்னரே சொத்து சம்பந்தாக வழக்கு நடந்த விவரங்கள் எனக்கு தெரியும். இவ்வழக்கின் 1, 2 பிரதிவாதிகள் பாலமுருகன் மீது வழக்கு தாக்கல் செய்து அந்த வழக்கு 2006 ல் இருந்து நடைபெற்று வரும் விவரம் எனக்கு தெரியும். மேற்படி வழக்கு 257/2006 என்று முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் நடந்து தற்போது இம்மன்றத்திற்கு மாற்றப்பட்டு O.S.No. 190/2014 நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி வழக்கு நான் கிரையம் பெற்ற பின்னர் 190/2014 வழக்கில் நாங்கள் அவசிய தரப்பினர் என்று கோரி மனு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் பெற்ற கிரைய ஆவணத்தில் அடமான தொகையை உள்ளடக்கி தான் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். அதன்பின் தான் இவ்வழக்கு தாக்கல்செய்துள்ளேன்.O.S.No. 68/2005 ல் வழக்கில் தொகையை செலுத்துவதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். அடமான தொகையை 1, 2 பிரதிவாதிகள் நீதிமன்றததில் தொகையை செலுத்தி O.S.No. 68/2005 மேற்படி தீர்ப்பாணையை திருப்தி செய்துவிட்டார்கள் என்றால் அதுபற்றி தெரியாது. எனக்கு கிரையம் கொடுப்பதற்கு முன்னரே O.S.No. 68/2005 வழக்கு நடவடிகக்கை மருதையா தேவர்க்கு தெரியும் என்றால் அதுகுறித்து தெரியாது. மேற்படி வழக்கு 68/2005 அடமானம் தொகை குறித்து எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் பாலமுருகன், உமாபார்வதி 3, 4 பிரதிவாதிகள் என்னிடம் கூறினார்கள். யார் யார் மீது அடமான தொகையை வசூல் செய்ய வழக்கு தாக்கல் செய்துள்ள விவரத்தையும் 3, 4 பிரதிவாதிகள் கூறினார்கள். 3, 4 பிரதிவாதிகளிடம் ஏன் அடமானத்தை செல்லடிக்கவில்லை என்று நான் கூறவில்லை என்றால் சரிதான். 19.12.2011 ல் நான் கிரையம் பெற்றுள்ளேன். மேற்படி கிரைய ஆவணம் எழுதும் முன்னரே உமாபார்வதியும் தான் தான் சொத்திற்கு உரிமையாளர் என்று கூறிவரும் விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். மேற்படி உமாபார்வதி உரிமையாளர் என்ற ஒரு நிலைப்பாடு உள்ள நிலையில் மருதையாதேவரிடம் இருந்து ஏன் கிரையம் பெற்றுள்ளீர்கள் என்றால் பாலமுருகனும் உமாபார்வதியும் அடமானம் பெற்றதாக கூறினார்கள்.

அவ்வாறு கூறும்போதே மேற்ப்டி வழக்கின் ஆவணங்களை காட்டினார்கள் என்றால் காட்டவில்லை. மேற்படி அடமானம் குறித்த ஆவணங்களை 3, 4 பிரதிவாதிகளிடம் நான் கேட்கவில்லை என்றால் சரிதான். 2ம் வாதி 4ம் பிரதிவாதியின் கணவர். 2ம் வாதியும், 4ம் பிரதிவாதியும் ஒரே வீட்டில் தான் கணவன் மனைவியாக உள்ளனர். எனக்கும் 2ம் வாதி, 3, 4 பிரதிவாதிகளுக்கு இடையில் பேச்சுவார்தை கிடையாது. 1, 2 வாதிகள், 3, 4 பிரதிவாதிகளுக்கு இடையில் நல்லது கெட்டது போய் வருவோம் என்றாலும், இன்று வரை ஒற்றுமையாக தான் உள்ளோம் என்றாலும் சரியல்ல. இவ்வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் பற்றிய விவரம்தெரியுமா என்றால் தெரியாது. வாதி தரப்பு ஆவணங்களை கிருஷ்ணன் கொண்டு போய் கொடுத்தாரா யார் கொடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது. இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக கூறும் ஆவணங்கள் காசி மருத்தப்ப தேவர் குமாரர் கண்ணப்ப தேவர் அடமானம் பத்திரம் 3ம் பிரதிவாதிக்கு எழுதிகொடுக்கம் காலத்தில் 3ம் பிரதிவாதியிடம் அசலாக ஒப்படைக்கப்பட்ட ஆவணங்கள் என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. மேற்படி ஆவணங்களை 3, 4 பிரதிவாதிகள் எங்களுடன் வஞ்சக்கூட்டு சேர்ந்து இவ்வழக்கு தாக்கல் செய்த காரணத்தினால் 3,4 பிரதிவாதிகள் இவ்வழக்கில் தாக்கல் செய்தவற்கு எங்கள் வழக்கறிஞரிடம் அவர்கள் நேரடியாக கொண்டுசென்று கொடுத்த ஆவணம் என்றால் சரிதான். தாவா சொத்தில் இன்றைய தேதி வரை நான் அனுபவத்தில் இல்லை என்றாலும், எவ்வித உரிமை மூலமும் நான் தாக்க்ல செய்துள்ளதாக கூறும் ஆவணங்களில் இல்லை என்றாலும் சரியல்ல. இன்றைய தேதி வரையில் பட்டா மாற்றம் செய்தவற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். நான் கிரையம் பெற்ற காலத்தில் மருதையா தேவரின் பெயரில் வருவாய் ஆவணங்களும் கிரைய ஆவணங்களும் இருநத்து கிடையாது என்றால் சரியல்ல. தாவா சொத்தான 827/1பி பெருமாள் தேவர் பெயரில் பட்டா எண். 611 ஏற்பட்டிருந்தது என்றால் சரிதான். 3ம் அயிட்ட சொத்திற்கு 829/1 பட்டா எண். 1818 என்று ஆவுடையாத்தாள், அப்பா சாமி தேவர் மகன் சண்முகையாத்தேவர், ஆதிலிங்கதேவர் மகன் சங்கரலிங்க தேவர் பெயரில் உள்ளது என்றால் சரிதான்.

மேற்படி நபர்களை யாரையும் நான் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். தாவா இதர சொத்துக்களுக்கு என்னுடைய பெயரிலும் மருதையா தேவர் பெயரிலும் பட்டா போன்ற அனுபவத்தை காட்டக்கூடிய ஆவணங்கள் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து காசிமருத்தப்பதேவரின் குமாரர் கண்ணப்ப தேவருக்கு பாத்தியப்பட்டு, அவருடைய காலத்திற்கு பின்பு ஆவுடையாத்தாள் என்ற ஆவுடைத்தாய்க்கு வாரிசின் படி கிடைத்து அவர் ஆண்டனுபவம்செய்து அவரின் பெயரால் வருவாய் துறையில் பட்டாக்களும் ஏற்பட்டு, 18.11.2004 தேதியில் 2ம் பிரதிவாதி மருத்தாளின் பெயரில் பதிவு உயில் ஆவணம் பிறப்பித்து கொடுத்து, அதன்படி 2ம் மருத்தாத்தாள் உரிமை பெற்று அனுபவித்து 1ம் பிரதிவாதிக்கு 21.12.2006 தேதியில் பதிவு கிரைய ஆவணம் மூலம் பாத்தியப்படுத்தி கொடுத்து, 1ம் பிரதிவாதி தனது அனுபவத்தில் வைத்து அவர்களது சொத்துக்களை அனுபவம் செய்து வருகீறார் என்றால் சரியல்ல. மேற்படியார்களின் அனுபவத்தில் இருந்த விவரம்தெரிந்து நான் மருதையாதேவரிடம் இருந்து மோசடியான கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. நான் பெற்ற கிரையம் மோசடியானது என்பதால் தான் இன்றைய தேதி வரையில் எனது பெயரில் பட்டா ஏற்படவில்லை எனற்ால் சரியல்ல. நான் கிரையம் பெற்ற தேதியிலேயே மேற்படி மருதையா தேவருக்கு சொத்து பாத்தியம் இல்லை என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. 1, 2 பிரதவாதிகளை இடையூறு செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் 3, 4 பிரதிவாதிகளுடன் சேர்ந்து மறுபயன் இல்லாமல் மோசடியான ஆவணங்கள் என்று தெரிந்தே ஆவணங்களை உற்பத்தி செய்துகொண்டோம் என்றால் சரியல்ல. 1, 2 வாதிகளான எங்களுக்கும் , 3,4 பிரதிவாதிகளுக்கும் பேச்சுவார்த்தை இல்லை என்று இவ்வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 2004ல் ஆவுடையாத்தாள் இறந்ததில் இருந்து 1,2 பிரதிவாதிகள் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றாலும் அவர்களுக்கு எதிர்இடை பாத்தியம் உள்ளது என்றாலும் சரியல்ல. தாவா வழக்கு சொத்துக்களை O.S.No.257/2006 வழக்காக இருந்து தற்போது 190/2014 இம்மன்ற வழக்கு நிலுவை காலத்தில் ஆவணங்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளதால் லிஸ்ட்பெண்டன்ஸ் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் நான் பெற்ற கிரையம் செல்லாது என்றால் சரியல்ல.

இந்த வழக்கு பிரிவு 10 சிபிசியின் படி முந்தைய வழக்கின் தீர்ப்பிற்கு உட்பட வேண்டிய வழக்கு என்றால் சரியல்ல. அதனால் என்னுடைய வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும்என்றால் சரியல்ல. இந்த வழக்கு அவசிய கட்சியாக புல எண். 827/1 பி ல் உள்ள சொத்தின் உரிமையாளர்களை கட்சியாக சேர்க்காததாலும், பட்டா எண். 1818 ல் கண்டபடியான நபர்களை கட்சியாக சேர்க்காத காரணதினாலும அவசிய தரப்பினர்களை சேர்க்காத தோஷத்தால் பாதிப்படைந்துள்ளது என்றால் சரியல்ல. நான் இவ்வழககில் எனக்காக மட்டும் தான் சாட்சியம்அளிக்கிறேன். மற்றவர்களுக்காக நான் சாட்சியம் அளிக்கவில்லை. மற்றவர்களின் வழககு விவரங்கள் எனக்கு தெரியாது. கிருஷ்ணனின் வழக்கு நிலைபாடு என்ன என்று எனக்கு தெரியாது. வழக்கில் கோரியவாறு பரிகாரங்கள் எனக்கு கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல.

**அசல் வழககு எண். 190/2014 பிரதிவாதி தரப்பில் ஆஜர் இல்லை. குறுக்கு விசாரணை இல்லை.**